நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

## தரம் : தொடக்கநிலை

*December 2007*

வினாக்கள் : 40

வழங்கப்படும் நேரம் : 60 நிமிடங்கள்

ஆசிரியர் வாசிப்பதற்கான நேரம் : 15 நிமிடங்கள்

**ஆசிரியரின் கவனத்திற்கு :**

- முழு வினாத்தாளும் முதல் 15 நிமிடங்களில் **மட்டுமே** வாசிக்கப்பட வேண்டும்.
- வாசித்த பின்னர் வேறு உதவிகள் வழங்கப்படக் கூடாது.
- வாசிக்கப்படும் நேரத்தில் மாணவர்கள் வினாத்தாளிலோ அல்லது விடைத்தாளிலோ எந்த விதமான அடையாளங்களையும் இடக்கூடாது.

**உங்கள் பதில்களை தரப்பட்ட விடைத்தாளில் குறியிடுக.**

**For questions 1 to 3, choose the word(s) that best describe the action shown in the picture.**

**1 முதல் 3 வரையுள்ள வினாக்களுக்கு அருகில் உள்ள காணப்படும் அல்லது நடக்கும் செய்கையைச் சரியாகக் குறிக்கும் சொல்லை (சொற்களை) தெரிவு செய்க.**



1. இந்த மனிதர்

(a) ஓடுகின்றார்.
(b) நடக்கின்றார்.
(c) நிற்கின்றார்.
(d) பறக்கின்றார்.



2. அரசன்

(a) கையில் வாளுடன் குதிரையில் இருக்கின்றான்.
(b) கையில் வாளுடன் யானையில் இருக்கின்றான்.
(c) கையில் வாளுடன் சிங்கத்தில் இருக்கின்றான்.
(d) கையில் வாளுடன் நாயில் இருக்கின்றான்.




3. இந்த மரக்கிளையில் ஒரு

(a) பாம்பு இருக்கின்றது.
(b) பறவை இருக்கின்றது.
(c) மிருகம் இருக்கின்றது.
(d) பூச்சி இருக்கின்றது.

## Read the Poem "ஆத்திசூடி" and answer the questions 4 to 7

**"ஆத்திசூடி" என்ற பாடலை வாசித்து அவற்றில் இருந்து பெறப்படும் தகவல்களைக் கொண்டு 4 முதல் 7 வரையிலுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

"ஆத்திசூடி"யின் ஒரு பகுதி.

**அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்**
**ஆலயம் தொழுவது சாலவும் நன்று**
**எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்**

4. பாடலில் "அன்னை" என யார் குறிப்பிடப்படுகிறார்?

(a) அம்மா (b) அப்பா (c) மாமா (d) தம்பி

அடுத்த பக்கத்தில் தொடரும்.

5. பாடலில் “பிதா” என யார் குறிப்பிடப்படுகிறார்?

(a) அம்மா (b) அப்பா (c) மாமா (d) தம்பி

6. பாடலில் வரும் தெய்வம் என்ற சொல்லின் கருத்து என்ன?

(a) அரசன் (b) ஆசிரியர் (c) கள்வன் (d) கடவுள்

7. இந்த பாடலில் கண்களாக கொள்ளபடவேண்டியவை யாவை எனக் குறிப்பிடப்படுகின்றன?

(a) அம்மாவும் அப்பாவும்
(b) மாமாவும் மாமியும்
(c) எண்ணும் எழுத்தும்
(d) தங்கையும் தம்பியும்

**For questions 8 and 9 choose the word that is spelt incorrectly in the given sentence.**
**8ஆம், 9ஆம் வினாக்களுக்கு தரப்பட்ட வசனத்திலே பிழையாக எழுதப்பட்டுள்ள சொல்லினைக் காட்டுக.**

8. அம்மாவும் அப்பாவும் வெழியே சென்றார்கள்.

(a) அம்மாவும்
(b) அப்பாவும்
(c) வெழியே
(d) சென்றார்கள்

9. சூரியன் மரைவது அழகாக இருந்தது.

(a) மரைவது
(b) அழகாக
(c) இருந்தது
(d) சூரியன்

**For questions 10 and 11 choose the correct spelling of the underlined word that is spelt incorrectly in the given sentence.**
**10ஆம், 11ஆம் வினாக்களுக்குத் தரப்பட்ட வசனத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள சொல் பிழையாக எழுதப்பட்டுள்ளது. அதற்குரிய சரியான சொல் எது?**

10. அவர்கள் <u>கடற்கறையில்</u> விளையாடினார்கள்.

(a) கடற்களையில் (b) கடற்கரையில்
(c) கடற்கழையில் (d) கடற்கலையில்

அடுத்த பக்கத்தில் தொடரும்.

11. நான் பல் **<u>துழக்கி</u>** முகம் கழுவினேன்.

(a) துளக்கி
(b) துறக்கி
(c) துலக்கி
(d) துரத்தி

**Look at the picture carefully and answer questions 12 to 15.**
**படத்தைக் கவனமாகப் பார்த்து 12 முதல் 15 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.**



12. எது சரி?

(a) ஒட்டகம் இருக்கிறது.
(b) ஒட்டகம் ஓடுகிறது.
(c) ஒட்டகம் நிற்கிறது.
(d) ஒட்டகம் தண்ணீர் குடிக்கிறது.

13. எது சரி?

(a) ஒட்டகத்திற்குப் பின்னால் ஒரு "பிரமிட்" தெரிகிறது.
(b) ஒட்டகத்திற்குப் பின்னால் இரண்டு "பிரமிட்கள்" தெரிகிறது.
(c) ஒட்டகத்திற்குப் பின்னால் நான்கு "பிரமிட்கள்" தெரிகிறது.
(d) ஒட்டகத்திற்குப் பின்னால் மூன்று "பிரமிட்கள்" தெரிகிறது.

14. எது சரி?

(a) மனிதன் ஓடுகிறான்.
(b) மனிதன் ஆடுகிறான்.
(c) மனிதன் இருக்கிறான்.
(d) மனிதன் மரம் நாட்டுகிறான்.



15. படத்தில் காணப்படுவது

(a) கோயில்
(b) வீடு
(c) கப்பல்
(d) மரம்



**For questions 16 to 18 choose the best word for each space.**
**16 முதல் 18 வரையுள்ள வினாக்களுக்கு ஒவ்வொரு இடைவெளிக்கும் மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

16. ராதாவுக்கு தாகம் ......................................................

(a) ஏற்பட்டது.
(b) கிடைத்தது.
(c) சென்றது.
(d) அடித்தது.

17. சூரியன் மேற்கில் ..........................................................

(a) மின்னும்
(b) மறையும்
(c) மங்கும்
(d) உதிக்கும்

18. வாழைப்பழம் இனிக்கும், அதுபோல புளியம் பழம் .................................

(a) கசக்கும்.
(b) புளிக்கும்.
(c) உறைக்கும்.
(d) துவர்க்கும்.

**For questions 19 to 21 choose the word that has the closest meaning to the underlined word(s)**
**19 முதல் 21 வரையிலான வினாக்களில் கோடிட்ட சொல்லுக்கு மிகப் பொருத்தமான சொல்லை காட்டுக.**

19. நான் தாகம் தீர தண்ணீர் <u>பருகினேன்</u>.

(a) படுத்தேன்.
(b) உடுத்தேன்.
(c) சாப்பிட்டேன்.
(d) குடித்தேன்.

20. நான் <u>விரைவாக</u> நடந்தேன்

(a) வேகமாக
(b) அதிகமாக
(c) மெதுவாக
(d) பறந்து

21. மோட்டார் வாகனம் <u>தெருவில்</u> ஓரமாக நின்றது.

(a) மைதானத்தில்
(b) வீட்டில்
(c) நடுவில்
(d) வீதியில்

**For questions 22 to 24 choose the word that is opposite in meaning to the underlined word.**
**22 முதல் 24 வரையிலான வினாக்களில் கோடிட்ட சொல்லுக்கு எதிர்கருத்துள்ள சொல்லை காட்டுக.**

22. எங்கள் வீட்டின் <u>முற்பக்கம்</u> ஒரு மரம் நிற்கிறது.

(a) நடுவில்
(b) வெளியே
(c) பிற்பக்கம்
(d) இடையில்

அடுத்த பக்கத்தில் தொடரும்.

23. சங்கிலியன் யாழ்பாணத்தை ஆண்ட **கடைசி** அரசன்.

(a) முதல் (b) இடை
(c) நடு (d) இரண்டாவது

24. காற்று **பலமாக** வீசியது.

(a) மெதுவாக (b) விரைவாக
(c) கெதியாக (d) அதிகமாக

**Read and understand the text “வீடு வரைதல்” and answer the questions 25 to 28**
**“வீடு வரைதல்” பற்றிய குறிப்புகளை வாசித்து அவற்றில் இருந்து பெறப்படும் தகவல்களைக் கொண்டு 25 முதல் 28 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**வீடு வரைதல்**

தேவையான பொருட்கள்:

1. காகிதம்
2. பச்சை, சிவப்பு, கறுப்பு நிறப் பென்சில்கள்
3. வரையும் பென்சில்

**வழி முறை**

| | |
|---|---|
| 1. 2 கோடுகள் வரைக. |  |
| 2. 2 கோடுகளையும் இன்னொரு கோட்டால் தொடுக்க. |  |
| 3. வீட்டின் கூரையை ஒரு முக்கோணமாக வரைக |  |
| 4. வீட்டின் கூரையை சிவப்பு நிறத்தால் தீட்டுக. |  |
| 5. வீட்டின் இரு பக்கங்களிலும் இரு மரங்களை கீறுக. |  |
| 6. மரங்களின் இலைகளுக்கு பச்சை நிறம் தீட்டுக. |  |

இந்த வீட்டை ஆறு படிமுறைகளில் சொல்லியவாறு வரையலாம்.

25. மூன்றாவது படியில் என்ன வரையப்பட்டுள்ளது?

(a) கூரை
(b) கதவு
(c) யன்னல்
(d) அத்திவாரம்

26. வீட்டின் கூரை என்ன நிறமாக இருக்கும்?

(a) பச்சை
(b) சிவப்பு
(c) கறுப்பு
(d) மஞ்சள்

27. வீட்டின் கூரையின் வடிவம் என்ன?

(a) சதுரம்
(b) முக்கோணம்
(c) வட்டம்
(d) நீள்சதுரம்

28. வீட்டின் இரு பக்கங்களிலும் வரையப்பட்டிருப்பவை என்ன?

(a) கூரை
(b) கதவு
(c) யன்னல்
(d) மரங்கள்

## For questions 29 to 32 choose the response that combines the sentences in the best way.

**29 முதல் 32 வரையிலான வினாக்களில் தரப்பட்டுள்ள வசனங்களை சரியான ஒழுங்கில் அமைத்துக் காட்டுக.**

29. அம்மா

(1) நித்திரை விட்டு எழுந்தாள்
(2) பல் துலக்கி முகம் கழுவினாள்
(3) காலை சாப்பாட்டை எனக்கு பரிமாறினாள்
(4) காலை சாப்பாடு தயார் செய்தாள்

(a) (1), (2), (4), (3)
(b) (3), (4), (2), (1)
(c) (2), (1), (3), (4)
(d) (4), (3), (2), (1)

அடுத்த பக்கத்தில் தொடரும்.

30. நான்

(1) விரைவாக பாடசாலையில் இருந்து வீடு திரும்பினேன்.
(2) எனவே வெளியில் விளையாட முடியவில்லை.
(3) வெளியில் விளையாட நினைத்தேன்.
(4) அப்பொழுது மழை பெய்யத் தொடங்கியது.

(a) (4), (2), (3), (1)
(b) (1), (3), (4), (2)
(c) (3), (2), (4), (1)
(d) (2), (4), (1), (3)

31. மாமா

(1) பயணச்சீட்டை அதிகாரியிடம் காட்டினார்.
(2) பின்பு வீடு வந்து சேர்ந்தார்.
(3) புகையிரதத்தில் இருந்து இறங்கினார்.
(4) மோட்டார் வாகனத்தை நோக்கி நடந்தார்.

(a) (1), (2), (4), (3)
(b) (3), (1), (4), (2)
(c) (2), (1), (3), (4)
(d) (4), (3), (1), (2)

32. நான்

(1) குளியல் அறையில் குளித்தேன்.
(2) பின்பு அம்மாவிடம் "போய் வருகிறேன்" என்று சொல்லி புறப்பட்டேன்.
(3) வாசலின் முன்பு நின்று காலணி அணிந்தேன்.
(4) ஈரத்தை துடைத்து ஆடை அணிந்தேன்.

(a) (4), (3), (1), (2)
(b) (1), (4), (3), (2)
(c) (1), (2), (4), (3)
(d) (3), (2), (1), (4)

## For questions 33 to 36 choose the correct word to complete the sentence.

**33 முதல் 36 வரையுள்ள வினாக்குளுக்கு மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து வசனத்தை நிறைவு செய்க.**

33. பாரதியாரின் பாடலை அவன் அழகாக ...........................................

(a) பாடினார்கள்.
(b) பாடினாள்.
(c) பாடினான்.
(d) பாடினோம்.

34. திருக்குறளை உலகில் பல ....................... மொழி பெயர்துள்ளார்கள்

(a) மொழிகளில்
(b) சொற்களில்
(c) பாடலில்
(d) ஆடலில்

35. மாமாவும் நானும் வீடு வந்து .................................

(a) சேர்ந்தேன். (b) சேர்ந்தோம்.
(c) சேர்ந்தாள். (d) சேர்ந்தான்.

36. அஞ்சலி சிட்னி நகரை சுற்றி பார்க்க ................................................

(a) சென்றார்கள். (b) சென்றான்.
(c) சென்றாள். (d) சென்றோம்.

**Read the text “புத்தியுள்ள காகம்” and answer questions 37 to 40.**
**“புத்தியுள்ள காகம்” என்பதை வாசித்து 37 முதல் 40வரையான வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

| புத்தியுள்ள காகம் |
|---|
| ஒரு மரத்தில் ஒரு காகம் இருந்தது. அதற்கு தாகம் வந்தது. அது அங்கும் இங்கும் பறந்து தண்ணீரைத் தேடியது. அப்போது ஒரு பானையைக் கண்டது. அதற்குள் சிறிதளவு தண்ணீர் இருந்தது. காகத்திற்கு அத் தண்ணீர் எட்டவில்லை. |
| காகம் சிறு கற்களைப் பானைக்குள் போட்டது. கற்களை போடப்போடத் தண்ணீர் மேலே மேலே வந்தது. காகம் அதைக் குடித்துவிட்ட மகிழ்ச்சியுடன் பறந்து சென்றது. அது புத்தியுள்ள காகம். |

37. காகம் முதலில் எங்கே இருந்தது?

(a) மரத்தில் (b) பானையில்
(c) நிலத்தில் (d) கல்லில்

38. காகம் எதைத் தேடியது?

(a) மரத்தை (b) கல்லை
(c) தண்ணீரை (d) நிலத்தை

39. காகம் என்ன குடித்தது

(a) மண் (b) தண்ணீர்
(c) கற்கள் (d) மரக்கிளை

40. காகம் பானைக்குள் எதைப் போட்டது?

(a) தண்ணீரை (b) இலையை
(c) மண்ணை (d) கற்களை